எனவே, அதற்கான விடையை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரிடத்திலே பெற்றுக் கொள்ளலாம்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூடங்குளம் அணு மின் நிலையத்திற்கு நிலங்களைத் தருகின்ற விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர் களுடைய பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பிலே முன்னுரிமை தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இப்போதுதான் ஆரம்பப் பணிகள் தொடங்கப்பட்டு இருக்கின்றன. ஏறக்குறைய 1,500 ஹெக்டேருக்கு மேல் நிலம் தேவைப்படுகிறது. அது சம்பந்தமாக மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தைக் கேட்டு இருக்கிறது. மாநில அரசாங்கம் அந்தப் பணிகளிலே ஈடுபட்டு இருக்கிறது. அப்படியே மாநில அரசாங்கம் நிலத்தை ஆர்ஜிதம் செய்து மத்திய அரசுக்கு ஒப்படைத்தாலும் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள் மத்திய அரசாங்கத்தினர் தான். மாநில அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் நிலம் கொடுப்பவர்களுடைய வீட்டுப் பிள்ளைகளுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்பதை வற்புறுத்தும்.

10–05 மணி

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அணுமின் நிலையப் பகுதியிலே கட்டுகின்ற அலுவலகங்கள், கோடவுன் போன்ற கட்டுமானப் பணிகள் அனைத்தும் தொகுதியிலுள்ள பகுதிகளிலே கட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணுமின் நிலையம் அமைந்திட விஜயாபதி என்ற கிராமத்திலே 1,037 ஹெக்டேர் நிலமும், செட்டிகுளம் என்ற கிராமத்திலே 516 ஹெக்டேர் நிலமும் ஆர்ஜிதம் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இந்த அபிவிருத்தித் திட்டங்கள் தனியாக இருந் தாலும் இந்த இரண்டு கிராமத்திற்குள்ளேதான் நடைபெறும்.

திருவண்ணாமலையில் அதிக அளவு சக்தியுள்ள மின் நிலையம்.

* 1025 திரு. கே. பிச்சாண்டி :

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலையில் அதிக அளவு சக்தியுள்ள மின் நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

[1990 சனவரி 23]

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின் திட்டத்திற்கு அனுமதி கொடுக்கப்பட்டு நீண்ட நாட்களாகியும்கூட இதுவரை நிலம் கையகப்படுத்தப் படாமல் இருக்கிறது. வருவாய்த் துறை அதிகாரிகளுடைய மெத்தனத்தால் இத்திட்டம் மிகவும் தாமதப்படுத்தப்படுகிறது. இதை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில் ஏற்கெனவே 10 எம்.வி.ஏ. திறன் கொண்ட 110/11 கே.வி. மின் நிலையம் இயங்கி வருகிறது. அதனுடைய உச்ச தேவை 1994-95-ல் 230/110 கே.வி.-யாக உயரும் என்று எதிர்பார்க்கப்பட்டு 1994-95-ல் இந்த உயர் அழுத்த மின் தானியங்கிகளைப் பொருத்த அரசு முடிவு செய்து இருக்கிறது. இதற்காக ஏற்கெனவே அரசாங்கம் நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்காக நடவடிக்கை எடுத்து இருக்கிறது. வடாற்காடு மாவட்டம், திருவண்ணாமலை வட்டம், சமுத்திரம் கிராமத்தில் சர்வே எண் 135-ல் 10 ஹெக்டேர் பரப்புள்ள நிலம் வேண்டுமென்று கையகப் படுத்துவதற்கான செயற்குறிப்பு வேலூர் கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு 15-3-1989-ல் அனுப்பப்பட்டுள்ளது. அறிக்கை கிடைத்தவுடன் மேலும் நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை தற்போது மாவட்டத்தின் தலை நகராக இருக்கிற காரணத்தாலும், திருவண்ணாமலைப் பகுதியிலே அடிக்கடி மின் ஏற்றத்தாழ்வுகள் காரணமாக விவசாயிகளுடைய மோட்டார்கள் பழுதுபடுகின்ற காரணத்தாலும், இத்திட்டத்தை விரைந்து நிறைவேற்றித்தர அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை விரைந்து செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே நெய்வேலியின் அனல் மின் நிலையத்திலிருந்தும், சிங்காரப்பேட்டையிலிருந்தும் உற்பத்தி ஆகின்ற மின்சாரத்தை 230/110 கே.வி. உயர் மின் அழுத்தமுள்ள மின் தானியங்கி துணை மின் நிலையத்தை அமைப்பதற்கு இலாகா நடவடிக்கை எடுத்து வருகிறது.